இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in

murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 84 – ஒலி : 84 – திருவள்ளுவர் ஆண்டு 2056 – ஐப்பசி 18 – செவ்வாய்க்கிழமை 04 நவம்பர் 2025 – மதுரை 12 + 12 பக்கங்கள் Established: 10.8.1942 - Volume: 84 - Issue 84: Thiruvalluvar Year - 2056 - Ayppasi 18 - Tuesday 04 November 2025 - Madurai 12+12 Pages ₹ 5.00

## பா.ஜ.க. எத்தகைய சதிச் செயலை செய்தாலும் தமிழ்நாட்டில் எடுபடாது!

# 2026-ல் தி.மு.கழக ஆட்சி நிச்சயம்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (3.11.2025) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் நடைபெற்ற கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் ஆ.மணி – புவனேஸ்வரி தம்பதியரின் மகன் பிரகதீஸ்வரன் மற்றும் கோவிந்தன் – சுகுணா தம்பதியரின் மகள் மது பிரதிக்சா ஆகியோரது திருமணத்தை தலைமையேற்று நடத்திவைத்து, மணமக்களை வாழ்த்தினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர்கள் எ.வ.வேலு, எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம், ஆர்.இராஜேந்திரன், சா.சி.சிவசங்கர், விடுதலைச் சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல்.திருமாவளவன் எம்.பி., முன்னாள் அமைச்சர் பழனியப்பன், தருமபுரி மாவட்ட ஆட்சித் தலைவர் ரெ.சதிஷ் மற்றும் உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளர் ஆ.மணி இல்ல மணவிழாவில் – முதல்வர் மு.க.ஸ்டாலின் உறுதி!

**தருமபுரி, நவ. 4 -**

**“பா.ஜ.க. எத்தகைய சதிச் செயலை செய்தாலும் அது தமிழ்நாட்டில் எடுபடாது! 2026-ல் தி.மு.கழக ஆட்சி நிச்சயம் அமையும்” என்று முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தருமபுரியில் கிழக்கு மாவட்டக் கழகப் பொறுப்பாளர் ஆ.மணி எம்.பி. இல்ல மணவிழாவில் உரையாற்றும் போது உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (03.11.2025) தருமபுரி மாவட்டம், பென்னாகரத்தில் நடைபெற்ற நாடாளுமன்ற உறுப்பினர் ஆ. மணி அவர்களின் மகன் பிரகதீஸ்வரன் மது பிரதிக்சா ஆகியோரது திருமண விழாவில் ஆற்றிய உரை வருமாறு :-

தருமபுரி கிழக்கு மாவட்ட கழக பொறுப்பாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நம்முடைய அருமை சகோதரர் மணி – புவனேஸ்வரி தம்பதியரின் மகன் பிரகதீஸ்வரன் மற்றும் கோவிந்தன் – சுகுணா தம்பதியரின் அருமை மகள் மது பிரதிக்சா ஆகியோரது மணவிழா நிகழ்ச்சிக்கு வருகை தந்து வாழ்த்தி அமர்ந்திருக்கக்கூடிய உங்கள் அனைவருக்கும் என்னுடைய அன்பான வணக்கம்.

ஆ. மணி அவர்களின் இல்லத்தில் நடைபெறக்கூடிய இந்த திருமண விழாவில் கலந்து கொண்டு, மண விழா நிகழ்ச்சியை நடத்தி வைத்து, மணக்கோலம் பூண்டிருக்கக்கூடிய மணமக்களை வாழ்த்தக்கூடிய ஒரு வாய்ப்பு எனக்கு கிடைத்திருக்கிறது. அதை எண்ணி நான் மகிழ்ச்சி அடைகிறேன்; பெருமைப்படுகிறேன்.

மணி அவர்களைப் பற்றி இங்கு இருக்கக்கூடிய எல்லோருக்கும் நன்றாக தெரியும். இன்றைக்குக்கூட எந்தச் சூழ்நிலையில் அவர் வந்திருக்கிறார் என்பது பலருக்கும் தெரியும் என்று நான் கருதுகிறேன்.

அவர் சில நாட்களுக்கு முன்பு உடல் நலிவுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில், நாளைய தினம், ஏன், இன்றைய தினமே சென்னைக்கு சென்று மருத்துவமனையில் அனுமதிக்க வேண்டிய கட்டாயத்திற்கு ஆளாகியிருக்கக்கூடிய நிலையில், அவர் இந்த நிகழ்ச்சிக்காக மருத்துவர்களின் அனுமதி பெற்று இங்கு வந்திருக்கிறார். அவர் உடல்நலத்தைப் பற்றியெல்லாம் கவலைப்படாமல் தலைவர் வருகிறார்; அதுவும் நம்முடைய வீட்டில் நடை பெறக்கூடிய திருமண நிகழ்ச்சியில் பங்கேற்க வருகிறார்; உடல்நலத்தைவிட எனக்கு அதுதான் முக்கியம் என்ற அந்த உணர்வோடு இந்த நிகழ்ச்சிக்கு வந்திருப்பதை எண்ணி நாமெல்லாம் நெகிழ்ச்சி அடைந்து கொண்டிருக்கிறோம்.

**பல்வேறு பொறுப்புகளில் சிறப்பாக பணியாற்றியுள்ளார்!**

- மணி அவர்கள், 1987ல் இருந்து கழக உறுப்பினராக தன்னை இணைத்துக் கொண்டு களப்பணியாற்றிக் கொண்டு வருகிறார். வழக்கறிஞராக பணியாற்றிக் கொண்டிருந்த நேரத்தில், இவருடைய ஆற்றலைப் பார்த்து, 2016ல் மாவட்ட வழக்கறிஞர் பிரிவுதுணை அமைப்பாளராக பொறுப்பேற்றுப் பணியாற்றக்கூடிய வாய்ப்பைப் பெற்றார்.
- அதனை தொடர்ந்து 2019ல் நடைபெற்ற பாப்பிரெட்டிபட்டி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தலில் கழகத்தின் வேட்பாளராகவும் போட்டியிட்டிருக்கிறார்.
- அதன் பிறகு, 2020 முதல் 2022 வரை மாவட்டப் பொறுப்புக் குழுவின் உறுப்பினராக பணியாற்றி இருக்கிறார்.
- 2023ல் தருமபுரி மேற்கு மாவட்டத் துணைச் செயலாளராக தனது பணியை தொடர்ந்து நிறைவேற்றி இருக்கிறார்.

இப்படி அடுத்தடுத்து பல பொறுப்புகள், அவரைத் தேடி வந்து, அதை அவர் ஏற்றுக்கொண்டு, அவர் பணியாற்றிய சிறப்பான நிகழ்ச்சிகளை எல்லாம் எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் தான், அவர் இப்போது தருமபுரி நாடாளுமன்ற உறுப்பினராகவும், மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டு இன்றைக்கு நாடாளுமன்றத்தில் ஒலித்துக் கொண்டிருக்கிறார். அதேபோல, இன்றைக்கு தருமபுரி கிழக்கு மாவட்டப் பொறுப்பாளராக இருந்து தன்னுடைய கடமையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார். மக்கள் பணியும், கழகப் பணியும் இந்த இரண்டு பணிகளையும் அவர் சிறப்பாக நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்.

மணி என்கின்ற அவருக்கு முன்னால் அவருடைய இனிஷியல் ‘ஆ’என்ற அந்த “ஆ” தான் அவருடைய இனிஷியலாக அமைந்திருக்கிறது. அவரின் சிறப்பான செயல்களைப் பார்த்து எல்லோருக்கும் ஏற்படுகின்ற வியப்புதான் அது. அப்படி, ‘ஆ’ என்று எல்லோரும் சொல்லக்கூடிய வகையில் வளர்ந்திருக்கிறார் நம்முடைய ஆ.மணி அவர்கள்.

**சிறப்பாக பணியாற்றினால் பொறுப்பு தேடி வரும்!**

கழகத்தைப் பொறுத்தவரைக்கும், சிறப்பாக பணியாற்றக்கூடியவர்களுக்கு அதில் பதவிகளாக

தொடர்ச்சி 3-ஆம் பக்கம்

## S.I.R. - இரட்டை வேடம் போடும் பழனிசாமி!

### வரும் 6-ம் தேதி முதற்கட்ட தேர்தல்

## பீகாரில் இன்று பிரச்சாரம் ஓய்கிறது!

### வாக்கு எண்ணிக்கை வரும் 14-ஆம் தேதி நடைபெறுகிறது!

பாட்னா, நவ. 4 -

பீகாரில் வரும் 6ம் தேதி முதல் கட்ட சட்டப்பேரவை தேர்தல் நடக்க உள்ள தொகுதிகளில் இன்றுடன் பிரச்சாரம் ஓய்கிறது. நேற்று முன்தினம் ஒரே நாளில் பிரதமர் மோடி, காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் அனல் தெறிக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டனர். பீகார் மாநிலத்தில் 243 தொகுதிகளுக்கான சட்டப்பேரவை தேர்தல் 2 கட்டங்களாக வரும் 6 மற்றும் 11ம் தேதிகளில் நடக்கிறது. வாக்கு எண்ணிக்கை வரும் 14ம் தேதி நடக்க உள்ளது. இந்நிலையில், முதல்கட்ட தேர்தல் நடக்கும் 121 தொகுதிகளில் இன்றுடன் பிரசாரம் ஓய்கிறது.

இதனால், பிரதமர் மோடி, ராகுல் காந்தி, அமித்ஷா, தேஜஸ்வி உள்ளிட்ட முக்கிய தலைவர்கள் நேற்று முன்தினம் இறுதிகட்ட அனல் தெறிக்கும் பிரசாரத்தில் ஈடுபட்டனர். ஆளும் ஐக்கிய ஜனதா தளம் மற்றும் பாஜ தலைமையிலான தேசிய ஜனநாயக கூட்டணியின் வேட்பாளர்களை ஆதரித்து பிரதமர் மோடி போஜ்பூர், நவாடா மாவட்டங்களில் தொடர்ச்சியான பேரணிகளில் உரையாற்றினார். மாலையில் பாட்னாவில் நடந்த பிரமாண்ட ரோடு ஷோவில் மோடி பங்கேற்றார்.

மக்களவை எதிர்க்கட்சி தலைவர் ராகுல் காந்தி, இந்தியா கூட்டணி கட்சி வேட்பாளர்களை ஆதரித்து ககாரியா, பெகுசராய் மாவட்டங்களில் தீவிர பிரசாரம் மேற்கொண்டார்.

இந்தியா கூட்டணியின் முதல்வர் வேட்பாளரான ராஷ்டிரிய ஜனதா தளத்தின் தேஜஸ்வி யாதவ் பாட்னாவில் நேற்று முன்தினம் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில், “நவம்பர் 14ம் தேதி தேர்தல் முடிவுகள் வெளியாகும். அதைத் தொடர்ந்து நவம்பர் 18ம் தேதி முதல்வராக நான் பதவியேற்பேன்.

பின்னர், நவம்பர் 26 முதல் டிசம்பரம் 26 வரை கர்மா காலமாக இருக்கும். அதில் அனைத்து குற்றவாளிகளும், அவர்களின் சாதி, மதம் எதுவும் பார்க்கப்படாமல், சிறையில் தள்ளி கடும் நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

### வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர மறுசீரமைப்பு!

## அரசியல் சாசனத்திற்கு எதிரானது!

### காங்கிரஸ் ஆதாரத்துடன் விமர்சனம்!

**புதுடெல்லி, நவ. 4 -**

**நாடு முழுவதும் வாக்காளர் சிறப்பு தீவிர மறுசீரமைப்பு என்பது சட்ட வரம்பிற்குள் வராது என ‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில செய்தித் தாளில் கட்டுரை வெளியிடப்பட்டுள்ளது. தேர்தல் ஆணையம் அதிகார வரம்பை மீறி செயல்படுவதாகவும் குற்றம்சாட்டப் பட்டுள்ளது.**

‘தி இந்தியன் எக்ஸ்பிரஸ்’ ஆங்கில செய்தித்தாளில் காங்கிரஸ் நாடாளுமன்ற உறுப்பினர் மனீஷ் திவாரி, நாடு முழுவதும் வாக்காளர் சிறப்பு தீவிர மறுசீரமைப்புக்கு எதிராக கட்டுரை ஒன்றை எழுதியுள்ளார். அதில், அரசியல் சாசனத்தின் படி, தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக செயல்பட முழு சுதந்திரம் வழங்கப்படவில்லை, ஆனால், தற்போது தேர்தல் ஆணையம் தன்னிச்சையாக அதிகார வரம்பை மீறி செயல்படுவதாக குறிப்பிட்டுள்ளார்.

நாடு முழுவதும் வாக்காளர் சிறப்பு தீவிர மறுசீரமைப்பு என்ற திட்டத்தை தேர்தல் ஆணையம் கையில் எடுத்திருப்பது இந்திய அரசியல் சாசனத்திற்கு எதிரானது என்று கூறியுள்ள மணீஷ் திவாரி, *Representation of the People Act*, 1950ன் பிரிவு 21(3) என்பது ஒரு தொகுதி அல்லது பகுதியில் அவசர நிலை ஏற்பட்டால் மட்டுமே சிறப்பு தீவிர மறுசீரமைப்பு நடத்த அனுமதிக்கிறது என சுட்டிக்காட்டியுள்ளார்.

ஆனால், அரசியல் சாசனத்தை மீறி எவ்வித பரிசோதனை மற்றும் தகுந்த விளக்கமும் இன்றி சிறப்பு தீவிர மறுசீரமைப்பை தேர்தல் ஆணையம் மேற்கொண்டு வருவது மக்களின் வாக்குரிமையை பாதிக்கும் அபாயம் நிறைந்தது என மணீஷ் திவாரி விமர்சித்துள்ளார்.

தேர்தல் ஆணையம் சிறப்பு அதிகாரங்களை உண்மையான அவசியமான, குறிப்பிட்ட சூழல்களில் மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்றும், மீறினால் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை ஜனநாயகத்தின் அடித்தளத்தையே உலுக்கிவிடும் என காங்கிரஸ் எம்.பி. மணீஷ் திவாரி அந்த கட்டுரையில் எச்சரித்துள்ளார்.

## சென்னையில் மிதமான மழை!

சென்னை, நவ. 4 –

சென்னை மற்றும் புறநகர்ப் பகுதிகளில் மிதமான மழை பெய்யலாம் என்று வானிலை ஆய்வு மையம் கணித்துள்ளது.

இதுதொடர்பாக வானிலை மையம் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாட்டில் ஒருசில இடங்களில் அதிகபட்ச வெப்பநிலை இயல்பை விட நான்கு டிகிரி செல்சியஸ் வரை அதிகமாக இருக்கலாம் என்று வானிலை மையம் தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு வங்கக்கடல் மற்றும் அதனை ஒட்டிய மியான்மர் கடலோரப் பகுதிகளில் புதிதாக காற்றழுத்தத் தாழ்வுப் பகுதி உருவாகியுள்ளதாகக் கூறியுள்ள வானிலை மையம், இது வடக்கு வடமேற்கு திசையில் நகர்ந்து மியான்மர் மற்றும் வங்கதேச கடற்கரையை ஒட்டி நகரக்கூடும் என்று கணித்துள்ளது. மேலும், கிழக்குத் திசை காற்றின் வேகமாறுபாடு காரணமாக தமிழ்நாட்டில் இரண்டு நாட்களுக்கு மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.

### ரூ.5,817 கோடி மதிப்புள்ள

## ரூ.2,000 நோட்டுகள் திரும்பப் பெறப்படவில்லை!


### ரிசர்வ் வங்கி அறிவிப்பு!

மும்பை, நவ. 4 -

ரூ.5,817 கோடி மதிப்பிலான ரூ.2,000 நோட்டுகள் திரும்பப் பெறப்படவில்லை என இந்திய ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது.

பொதுமக்களிடம் புழக்கத்தில் உள்ள ரூ.2,000 நோட்டுகள் திரும்ப பெறப்படுவதாக 2023 மே 19ஆம் தேதி ரிசர்வ் வங்கி அறிவித்தது. 2023அக்டோபர் 7 வரை வங்கிகள் மூலம் ரூ.2,000 நோட்டுகளை பொதுமக்கள் மாற்றிக்கொள்ளலாம் என தெரிவித்தது. அதனை தொடர்ந்து ரிசர்வ் வங்கி அலுவலகங்கள் மூலம் ரூ.2,000 நோட்டுகளை மாற்றிக்கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டது.

இந்த நிலையில், ரூ.3.56 லட்சம் கோடி மதிப்பிலான ரூ.2,000 நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாகவும், ரூ.5,817 கோடி மதிப்புள்ள ரூ.2,000 நோட்டுகள் ரிசர்வ் வங்கிக்கு திரும்பவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.



கடந்த அக்டோபர் 31வரை 98.37% சதவீதம் ரூ.2 ஆயிரம் நோட்டுகள் திரும்பப் பெறப்பட்டுள்ளதாக, ரிசர்வ் வங்கி தெரிவித்துள்ளது. ரூ.2 ஆயிரம் நோட்டு சட்டப்படி அதன் மதிப்பை இழக்கவில்லை என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.